## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை (தனியார்) லிமிடெட்டின் ‘‘கம்பனி’’ 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 10, 2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கம்பனிச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை அரச தகவல் உட்கட்டமைப்பு வசதிகள் (தனியார்) கம்பனி, ICTA உடன் ஒன்றிணைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஐந்தொகை திகதிக்கும் ம் நிதிக்கூற்றுக்கள் விநியோகிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கும் இடையே அதாவது 2022 திசெம்பர் 15 ஆம் திகதி LKAS 10 இன் பிரகாரம் இதனை ஒன்றிணைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இது அறிக்கைப்பட்ட கால எல்லையின் பின்னர் ஏற்பட்ட நிலைமையில் நடவடிக்கை எடுக்கின்றமையினால் சீராக்கப்படாத வெளிப்படுத்தல் ஒன்றாகும். எங்களால் LKAS - 10 இன் பிரகாரம் தேவையானபடி | நியமத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் வெளிப்படுத்துதல் தேவையற்றது என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 செப்டெம்பர் 14 ஆம் திகதி ஆரம்பித்து 2021 மார்ச் 13 ஆம் திகதியில் முடிவுறும் வகையில் General Cluster of Lanka Government Cloud 2.0 இற்காக Bare-metal Server வசதிகளை வழங்குவதற்காக கம்பனி Softlogic Information Technologies (Pvt) Ltd உடன் ICTA/GOSL/SER/NCB/ 2016/35 என்ற உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2021 செப்டெம்பர் 13 முதல் 2022 மார்ச் 14 வரையான காலத்திற்காக இரண்டாவது முற்கொடுப்பனவாக ரூபா 11,394,000 தொகை 2021.12.31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. 2022 சனவரி 01 முதல் 2022 மார்ச் 13 வரையான காலத்திற்கான ரூபா 439,584 தொகை, முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக 2021 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | Softlogic Information Technologies (Pvt) Ltd நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுத் தொகையான ரூபா 439,584 இனங்காண்பதற்கு தவறியிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் இந்த முற்கொடுப்பனவுத் தொகை இந்தக் கணக்கீட்டில் தேறிய மிகை / பற்றாக்குறை தொடர்பில் தாக்கம் ஏற்படுத்தவில்லை என்பதைக் குறிப்பிடுதல் முக்கியமாகும். முற்கொடுப்பனவாக அறிக்கையிடப்படாத முழுத்தொகையும் செலவினமாக அறவிடப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த தொகையும் மானிய வருமானமாக குறிப்பிடப்படுகின்றமையால் அதன் மூலம் மிகை / பற்றாக்குறை தொடர்பில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அவ்வாறே அதற்கு எதிராக கவனத்திற் கொள்ளும் போது முற்கொடுப்பனவு அறிக்கையிடப்படுமாயின் செலவினங்கள் முற்கொடுப்பனவு அளவால் குறைக்கப்படும். அதற்கு இணையாக மானிய வருமானமும் அந்த அளவால் குறைக்கப்படும். எதிர்காலத்தில் வருமானங்களை இனங்காண்பதற்காக எங்களுக்கு முற்செலுத்தப்பட்ட தொகையை பிற்போட்ட வருமானமாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி முற்கொடுப்பனவை இனங்காணல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 6,868,498 கணக்கீடு செய்யப்பட்டி ருக்கவில்லை. | EPF/ETF மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளத்திற்காக தனியான நிதியம் கோரிக்கையிடப்படாமல் EPF மற்றும் ETF உள்ளடக்கிய முழு சம்பளத்தையும் செலுத்துவதற்காக நிதியை ஒரே தடவையில் | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

அதன் பிரகாரம் சம்பளம் செலுத்துவதற்காக வெளிக்கம்பனியில் இருந்து பெறவேண்டிய மீதி கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் குறைந்து காணப்பட்டது.

தொழில்நுட்ப அமைச்சில் இருந்து கோரப்பட்டிருந்தது. இந்த நிதி திறைசேரியில் இருந்து கிடைத்த பின்னர் சம்பளம் தயாரிப்பதற்காக EPF, ETF, PAYE மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காகவும் அவை SSP சேவை வழங்குநருக்கும் மாற்றப்படுகின்றது. நிதியம் சராசரியாக ஒவ்வொரு மாதமும் 20 அல்லது 25 இற்கு இடையில் SSP இற்கு மாற்றப்படுகின்ற போதும் EPF மற்றும் ETF இற்காக செலுத்த வேண்டிய திகதி அடுத்துவரும் மாத இறுதியாக இருந்தமையால் SSP இனால் EPF மற்றும் ETF செலுத்துதல் அடுத்துவரும் மாதத்தின் போது மேற்கொள்வதற்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அதன் விளைவாக SSP இனால் அடுத்துவரும் மாதத்தின் இறுதி வரையிலும் விஷேடமாக கடந்த கால சம்பளத்திற்காக சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு பதிலாக நிதியத்தை நிறுத்தி வைப்பதாக கருத முடியும். திசெம்பர் மாதத்திற்கான EPF மற்றும் ETF செலுத்துதல் தொடர்பாக நிதியத்தில் தற்போது SSP இற்கு மாற்றப்பட்டமையால் அவை செலுத்த வேண்டியதாக எங்களால் கணிப்பிடாதிருந்தமையை தெளிவாக காண்பிக்க முடியும். சரியான கூற்றுக்களை வெளியிடுவதாயின் திசெம்பர் மாதத்திற்காக EPF மற்றும் ETF தொழில்நுட்ப ரீதியில் செலுத்த வேண்டியதாக இருந்த நபருக்கு தர்க்கிக்கக் கூடியதாக இருந்ததுடன் SSP இற்கு மாற்றப்பட்ட பணம் திசெம்பர் இறுதியில் கிடைக்க வேண்டியது எனக் கருத முடியும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்ககல்களைத் தவிர்ப்பதற்காக நிதி மாற்றப்பட்ட மாதத்தில் EPF மற்றும் ETF கொடுப்பனவை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கு எங்களால் தற்போதும் SSP நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட முடியும்.

### 1.5.3 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி ரூபா 4,983,947 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் இலங்கை இராணுவத்திற்கும் (ARMY), தொழில்நுட்ப அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப அமைச்சிற்கும், இலங்கை இராணுவத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனி செயலாளருடன் உள்ள சகல கடித பரிமாற்றங்கள் மற்றும் ஆலோசனைகளை சிறந்த முறையில் பரீட்சிக்கப்பட்ட போதும் சொத்துக்களை கையளிப்பதற்காக சபையில் இருந்து வழங்கப்பட்ட அங்கீகாரம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் கண்டறிய முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்களை கையளிப்பதற்கு முன் தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 1.5.4 அமைப்பின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நட்டம் ரூபா 41,648,126 ஆக இருந்ததுடன் 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நட்டம் ரூபா 109,986,309 ஆகும். மேலும் கம்பனியின் உரிமை 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 109,986,289 மறை பெறுமதியாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதனால் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்காதிருக்குமாயின் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு நிச்சயமற்றதாக இருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான செயற்பாடு மற்றும் செயல்திட்டங்களில் பாதீடு செய்யப்பட்ட பிரிவுகளின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ICTA இன் செயற்படு நிலையில் தொடர்ச்சியாக காணப்படுகின்றமையை கூறமுடியும். ICTA இற்காக 2023 ஆம் ஆண்டிற்காக கோரப்பட்ட ரூபா 6,583.10 மில்லியன் பாதீட்டில் வழங்கப்பட்டுள்ள நோக்கங்களின் பிரகாரம் NPD அங்கீகாரித்த செயற்றிட்டம் மற்றும் செயற்பாடுகள் இரண்டினதும் ரூபா 6,556 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதனால் ICTA இல் தொடர்ச்சியான இருப்புத் தொடர்பாக பிரச்சினை ஒன்று காணப்படவில்லை. மேலும் ICTA இல் காணப்படுகின்ற தொடர்ச்சியான இருப்பு பிரச்சினை தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் எங்களுக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை. மறை தேறிய பெறுமதியான நட்டத்தின் காரணமாக தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பிரச்சினை ஒன்றை தீர்மானித்து சிறந்த மறை சொத்தொன்று இல்லாத வகையில் சீராக்குதல் வேண்டும். | ஆபத்துக்களைக் குறைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சம்பளம் தயாரித்தல் கம்பனிக்கு நிதியத்தை மற்றுதல் | 342,428,694 | பற்றுச்சீட்டுகள் | சம்பளம் செலுத்துவதற்குத் தேவையான நிதி தற்போது எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கு விபரங்களின் அடிப்படையில் SSP இற்கு மாற்றப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட நிதியம் தற்போது சம்பளம் செலுத்துதல் மற்றும் உரிய செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. மறுபக்கத்தில் SSP சம்பளம் செலுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படுகின்றமையால் அது நிதியத்திற்கான பற்றுச்சீட்டாக கருத முடியும். எனினும் எதிர்காலத்தில் SSP இற்கு பற்றுச்சீட்டொன்றை வழங்குவதற்கு நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். | சகல கொடுப்பனவுகளும் பற்றுச்சீட்டுக்களுடன் காணப்படல் வேண்டும். |
| (ஆ) | வாகன வாடகை செலுத்துதல் | 5,829,600 | பற்றுச்சீட்டுகள் | வாகன வாடகை தொடர்பாக காசோலைகள் எங்களால் பெறப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பற்றுச்சீட்டு வழங்குமாறு வழங்குநர்களிடம் கோருதல் நடைமுறை ரீதியில் வசதியீனம் ஆகும். அதனால் காசோலை சேகரிப்பதற்காக உறுதிச் சீட்டின் முன் பக்கத்தில் உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநரின் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் போதியளவாக பயன்படுத்த முடியும் என்பது எமது நம்பிக்கையாகும். | சகல கொடுப்பனவுகளும் பற்றுச்சீட்டுக்களுடன் காணப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு Sri Lanka Computer Emergency Response Team (Pvt) Ltd (CERT) இற்கு செலுத்த வேண்டிய மிகுதித் தொகை ரூபா 40,215,928 ஆக | CERT தொடர்பாக செலுத்துவதற்கு எதுவும் காணப்படாமையால் அவை தொடர்பாக எங்களுக்கு பொறுப்பொன்று காணப்படவில்லை. CERT இல் ஒரு பகுதி மாற்றப் பட்ட சந்தர்ப்பத்தின் போது CERT இனால் | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இருந்ததுடன் அதனை தீர்க்காமல் நீண்ட காலமாக காணப்பட்டது. | வழங்குனர்களுக்கு செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. இந்த செலுத்த வேண்டிய மீதி கணக்கீட்டு வழுக்களின் விலைவாக இருந்தமை எங்களால் தற்போது தொழில்நுட்ப அமைச்சிற்கும் மற்றும் CERT இற்கும் விரிவாக விளக்கமளிக் கப்பட்டுள்ளது. இந்த நிலுவை மீதியை சரிசெய்வதற்கு MOT தற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என அறியத்தருகின்றோம். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 133(1)ஆம் பிரிவு | ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை பங்குரிமையாளர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். கம்பனி வருடாந்த பொதுக் கூட்டமொன்றை நடாத்தியிருக்க வில்லை. | நிதிக் கணக்குகள் தயாரிக்கும் தாமதத்தின் காரணமாக வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்துவதற்கு தாமதமடைந்திருந்தது. | கம்பனிச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/12 இன் 5.2.4 ஆம் அத்தியாயம் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வருடாந்த பாதீடு தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதி நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு குறையாத காலத்திற்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும். எனினும் சுற்றறிகையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக முன்னரே தயாரிக்கப்பட்டுள்ள பாதீடு தற்போது உங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. பதீட்டை சபை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் பாதீட்டை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. ICTA நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீடு சனாதிபதி செயலகத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தொழில்நுட்ப அமைச்சினால் 2021 ஆம் | சுற்றறிக்கை ஆலோசனையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டிற்காக ICTA இல் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்காதிருந்த போதும் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டுக்காக ICTA வெற்றிகரமாகத் தயாரித்து அங்கீகாரம் பெற்றுள்ளமை இந்த ஆவணத்தின் மூலம் காண்பிக்கப்படுகின்றது. | |
| (இ) | நிதிப் பிரமாணம் 267 | ஊழியர் ஒருவரின் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளல் சம்பள பங்களிப்பாளர்கள் தானாகவே செலுத்த வேண்டியிருந்ததுடன் அவர்களின் கையொப்பம் சம்பளப் பதிவேட்டில் வைக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையாயின் பற்றுச்சீட்டு பெறப்படல் வேண்டும். கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சம்பளம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக ஊழியர் கையொப்பம் இடாமையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். தவிர்க்க முடியாத காரணங்களாயின் எங்களால் சம்பளம் வழங்குவதற்காக ஊழியரை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முன்னுரிமை காண்பிக்கப்படாதிருந்தது டன் ஊழியர்களினால் வழங்கப்படுகின்ற வங்கிக் கணக்கிற்கு சம்பளம் நேரடியாக மாற்றுதல் தொடர்பில் நாங்கள் நம்பிக்கையுடன் செயற்படுகின்றோம். எனினும் நாங்கள் சரியான நடவடிக்கை எடுத்து 2023 மார்ச் மாதம் முதல் விநியோகிக்கப்பட்ட சம்பளத்திற்காக ஊழியரை உறுதிப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். |
| | நிதிப் பிரமாணம் 756 | நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்த | மெய்மையாய்வுச் சபை நியமனம் தாமதத்தினால் மெய்மை ஆய்வுச் சபை குறித்துரைத்த கால எல்லையில் கூடுவதற்கு | நிதிப் பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தினங்களின் போது மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்காக 2022 ஏப்ரல் மாதம் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் மெய்மையாய்வு 2022 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தீர்மானிக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம்.<br><br>இந்தத் தாமதம் அடிப்படையாக நிதித் திணைக்களத்தின் தலைவரின் மாற்றத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள பிரச்சினைகள் சிலவற்றினால் தாமதமடைந்திருந்ததுடன் முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களும் ஆகும். உள்ளபடியாக தாமதமாக ஆவணங்கள் மற்றும் முன்னைய மெய்மை ஆய்வு செயற்பாடுகள் தொடர்பாக விரிவான மீளாய்வின் பின்னர் சகல மாற்றங்களுடனும் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்குவதற்கு காலம் எடுக்கின்றது. மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு நிதிப் பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள குறித்துரைத்த கால அட்டவணையில் மெய்மை ஆய்வு சபையினால் மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துதல் எங்களால் 2022 ஆம் ஆண்டின் போது இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளது. | |
| நிதிப் பிரமாணம் 835(2)(உ) | பிரமாணத்தின் பிரகாரம் கட்டிட வாடகை உடன்படிக்கை கால எல்லை மூன்று வருடங்களை விஞ்சாதிருந்த போதிலும் கம்பனி நான்கு வருடங்களுக்காக வாடகை உடன்படிக்கை | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை, ICTA இனால் ஆய்வுக் காலத்திற்காக இயலுமான வரை கவனத்திற் கொண்டு 04 வருடங்களுக்கு வாடகைப் பணத்திற்காக உறுதிப்படுத்தப்படுகின்றது | நிதிப் பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருந்தது. | . 2.2.4(அ) இன் படி பெறுகைகள் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அது திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் (DPC) எல்லையின் கீழ் ஆக இருந்ததுடன் உரிய வழிகாட்டியின் 2.8.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகும். | |
| நிதிப் பிரமாணம் 1645 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணை பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் மூலம் குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்பட்டுள்ள படிவங்கள் பேணிச் செல்லப்படாத போதும் தேவையான விபரங்களுடன் எங்களிடம் ஓட்ட அட்டவணை பின்பற்றப்பட்டிருந்தது. மறுபக்கத்தில் அரசாங் கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலில் காண்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டிக்கு இணங்க தமது நிர்வாகம் மற்றும் நிதி கைநூலில் அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் கம்பனி மற்றும் தொகுதியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 41,648,126 மற்றும் ரூபா 43,689,619 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,821,249,302 மற்றும் ரூபா 1,819,768,568 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,862,897,428 மற்றும் ரூபா 1,863,458,187 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மானிய வருமானம் குறைவடைந்தமை மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் செலவினங்கள் உயர்ந்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கமனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2021 மார்ச் மாதத்தின் போது கட்டிமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும் 2021 மார்ச் முதல் யூன் வரையான காலத்திற்காக புதிதாக வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடம் மற்றும் பழைய கட்டிடத்திற்கு முறையே ரூபா 20,943,320 மற்றும் ரூபா 6,048,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | ICTA புதிய கட்டிடத்துடன் 2021 மார்ச் மாதத்தின் போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மறுமசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழுதுபார்த்தல் பணிகளில் பகுதிகளாக்குதல், பொருத்துதல், தளபாடப் பொருட்கள் இணைய வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் அவற்றில் குடியிருப்பதற்காக ஆகக் குறைந்தது 03 மாதங்கள் தேவையாகும். 2021 யூலை மாதம் முதல் எங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடம் கையளிக்கப்பட்டு புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதியத்தை சிக்கனமாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் கம்பனியின் சம்பளம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளல் வெளியாருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் சம்பளம் தயாரிக்கும் பணிகள் வெளியாருக்காக வழங்கப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் ஊழியர் சேமலாக நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அன்னளவாக ரூபா 6.5 மில்லியன் அளவில் அக் கம்பனியால் நாளாந்தம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | EPF/ETP மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளங்களுக்காக தனியாக நிதியமொன்று கோராமல் EPF மற்றும் ETP உள்ளடக்கிய மொத்த சம்பளத்தையும் செலுத்துவதற்காக ஒரே தடவையில் தொழில்நுட்ப அமைச்சரிடமிருந்து நிதி கோரப்பட்டிருந்தது. அந்த நிதி திறைசேரியில் இருந்து கிடைத்த பின்னர் சம்பளம் தயாரிப்பதற்காக EPF, ETF, PAYE மற்றும் ஏனைய உரித்தான கொடுப்பனவுகளுக்காக SSP (சேவை வழங்குநர்) இற்கு மாற்றப்படுகின்றது. இந்த நிதியம் சராசரியாக ஒவ்வொரு மாதமும் 20 மற்றும் 25 இற்கிடையிலான காலத்தில் SSP இற்கு மாற்றப்படுகின்ற போதும் EPF மற்றும் ETP இற்காக கொடுப்பனவு செய்வதற்கு குறித்துரைத்த திகதிக்கு அடுத்துவரும் மாதத்தின் இறுதியில் காணப்படுகின்றமையால் அடுத்துவரும் மாதத்தில் EPF மற்றும் ETP செலுத்துவதற்காக SSP இனால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அதன் விளைவாக SSP அடுத்து வரும் | நிதியம் வெளித்தரப் பினருக்கு மாற்றப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாத இறுதி வரை விஷேடமாக கடந்த கால சம்பளத்தை சீராக்குவதற்காக நிதியம் நிறுத்திவைக்கப்படுகின்றது. அவ்வாறே திசம்பர் மாதத்திற்கான EPF மற்றும் ETP செலுத்துதல் தொடர்பாக, நிதியம் தற்போது SSP இற்கு மாற்றப்படுகின்றமையால் அவை செலுத்த வேண்டியதாக எங்களால் கணிப்பிடப்படாதிருந்தமையை தெளிவாகக் காண்பிக்க முடியும். சரியான கூற்றுக்களைக் தயாரிப்பதாயின் டிசம்பர் மாத்திற்கான EPF மற்றும் ETP தொழில்நுட்ப ரீதியாக செலுத்த வேண்டியுள்ள நபர்களுக்கு கேட்கக்கூடியதாக இருந்ததுடன் SSP இற்கு மாற்றப்பட்ட நிதி டிசம்பர் இறுதியில் கிடைக்க வேண்டியது எனக் கருத முடியும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக நிதியம் மாற்றப்பட்ட மாதத்திலேயே EPF மற்றும் ETP கொடுப்பனவு செயற்பாடுகளை செய்யுமாறு எங்களால் தற்போது SSP நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்காக வாடகைக் கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ளும் பெறுகைகளுக்காக பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மையின் இலக்கம் 08 என்ற தேசிய பெறுகைகள் முகவராண்மை நிறுவனத்தின் சுற்றறிக்கையில் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.3 வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு கம்பனி இணங்கியிருக்கவில்லை. மேலும் கம்பனியின் தலைவர் 2020 இன் போது இந்த பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிப்பதற்கு அங்கீகரித்திருந்ததுடன் கட்டிடத்தின் பௌதீக | 2.8.4 ஆம் பிரிவின் கீழ் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தலைவரால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) நியமிக்கப்பட்டுள்ளது. தலைவர் பௌதீக பரிசோதனைக் குழுவுடன் பங்குபெற்றி கலந்துரையாடல் குழுவின் தலைவராக எடுக்க வேண்டிய பெறுகைத் தீர்மானத்தில் முக்கியத்துவமிக்கவையாகும்.<br><br>2021 ஆம் ஆண்டின் போது அந்தத் தலைவர் தொழில் நுட்ப அமைச்சின் செயலாளராகக் நியமிக்கப்பட்டிருந்தார். சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல விலை எண்ணிக்கைகளும் DPC எல்லையினை விட உயர்வாகக் காணப்பட்டதன் காரணமாக அமைச்சின் பெறுகைக்குழு (MPC) முன் அறிவித்தலின் கீழ் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படி செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைக்கு சமூகமளித்திருந்ததுடன் கலந்துரையாடல் குழுவின் தலைவராகவும் நடவடிக்கை எடுத்திருந்தார். அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சின் செயலாளராக அமைச்சின் பெறுகைக் குழு அங்கீகரித்து அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவராகவும் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறுகை செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக ICTA இனால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. 2021 சனவரி 01 ஆம் திகதிய ICTA/PRO/GEN/05/21 ஆம் இலக்க கடிதத்தில் (கோவை பொலியோ இலக்கம் 282) அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவராக செயற்படுவதற்கு செயலாளர் தவிர ஏனைய ஒருவர் பொருத்தமான பதவி அணி ஒன்று இல்லாதிருந்தமையை தெளிவாக கூற முடியும். | |
| (ஆ) | தேசிய பெறுகைகள் முகவராண்மையினால் விநியோகிக்கப்பட்ட 2006 சனவரி 25 ஆம் திகதிய இலக்கம 08 என்ற NPA சுற்றறிக்கையின் படி சகல பெறுகைப் பொருட்கள், வேலை மற்றும் சேவை பெறுகைகள் வழிகாட்டி கோவை பின்பற்றப்படல் வேண்டும். பெறுகைள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமல் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் கம்பனியால் பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் உபசரிப்பு சேவைகள் பெறப்பட்டிருந்தது. மேலும் ஆண்டிற்காகாக முறையே ரூபா 1,049,069 தொகை, 2,025,325 மற்றும் ரூபா 1,042,907 செலுத்தப்பட்டிருந்தது. | **பாதுகாப்பு**<br><br>ICTA புதிய கட்டிடத்திற்கு 2021 யூன் மாதத்தின் போது மீண்டும் கொண்டு செல்லப் பட்டிருந்ததுடன் ஏனைய மாடிகளில் மறுசீராமைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. ICTA இனால் பெறுகைகள் செயற்பாடுகள் ஊடாக பொருத்தமான சேவையினை வழங்குபவர் தெரிவு செய்யப்படும் வரை அந்த நிறுவனம் மீண்டும் அமைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பெற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு கம்பனியின் சேவைகளை தொடர்ச்சியாக பெற்றிருந்தது. எனினும் 2022 இன் போது ICTA இனால் போட்டியாளர் கேள்வி செயற்பாடுகள் ஊடாக பொருத்தமான சேவை வழங்குநர் பெறப்பட்டிருந்தார்.<br><br>**சுத்தம் செய்தல்**<br><br>ICTA இனால் வழங்குனர் தெரிவு செய்யப்படடிருந்ததுடன் விசேட வழங்குனரை தெரிவு செய்வதற்காக பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றுதல் தேவையாக இருந்த போதிலும் சேவை நீடிப்பு கைச்சாத்திடலுடன் மாத்திரம் உடன்படிக்கை நீடிக்கப்படுகின்றது. பிரச்சினைகளை அறிந்தமையினால் நாங்கள் போட்டியாளர் கேள்வி கோரும் நடைமுறைகளை பின்பற்றி 2022 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மே முதல் அமுல்படும் வகையில் வழங்குனர் தெரிவு செய்யப்படுகின்றனர்.

**தேனீர் வழங்கும் சேவை**

ICTA நிறுவனத்தினால் வழங்குநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் விசேட வழங்குநர் தெரிவு செய்வதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கு தேவையாக இருந்த போதிலும் சேவை நீடிப்பு கைச்சாத்திடலுடன் மாத்திரம் உடன்படிக்கை நீடிக்கப்படுகின்றது. பிரச்சினைகளை அறிந்து தற்போது வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்காக போட்டியாளர் கேள்வி கோரும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 16 ஆம் திகதிய 20/1784/301/012 என்ற அமைச்சரவைப் தீர்மானத்தின் படி 2021ஆம் ஆண்டு முதல் கம்பனியின் ஒப்பந்த பதவியணியினர் புதிய சம்பள கட்டமைப்பின் அடிப்படையில் நிரந்ரமாக உள்ளீர்க்கப்பட்டு அந்த அமைச்சரவைத் தீர்மானத்தில் காண்பிக்கப் பட்டுள்ள பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கி இருக்கவில்லை.<br><br>* தேசிய டிஜிட்டல் கொள்கை மற்றும் அமுல்படுத்தும் உபாய வழிகள்'' செயற்பாட்டு கொண்டு வருவதற்காக 2021 முதல் 2025 வரை 05 வருட காலத்தை மேவுகை செய்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல்.<br><br>* செயற்திட்டத்திற்குரிய ஆலோசனைக் கட்டணங்களில் செயற்திட்ட | தேசிய டிஜிட்டல் கொள்கை மற்றும் அமுல்படுத்தும் உபாய வழிகளுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் ICTA இனால் டிஜிட்டல் அரசு மற்றும் அரச, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் தேவைக்கான விபரங்கள் உபாயா வழிகள் தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>காணப்படுகின்ற பதவியணியினர் இந்த ஒவ்வொரு தலைப்பிற்கும் ஒதுக்கப்பட்டு உபாய வழிகள் மற்றும் திட்டங்களுடன் வேலை பதிற்கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நிரந்தரப் பதவியணியினருக்கு மேலதிகமாக ICTA இல் ஒப்பந்த பதவியணினரும் இருக்கின்றனர். இந்த ஒப்பந்தப் பதவியணியினரில் சிலர் அவர்கள் தொடர்பான செயற் திட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளன.<br><br>செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நடைமுறைச் செலவினங்கள் மற்றும் அதன் செயற்திட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஆலோசனையாளர்களுக்கு செலுத்த | அமைச்சரவைத் தீர்மானத்தின் ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

செலவினங்களை அறவிடுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் அதற்காக பாதீட்டு நிதி ஏற்பாடுகளில் ஏனைய செலவினங்களை ஒதுக்குதல்.

வேண்டிய கட்டணம் இரண்டினையும் உள்ளடக்கி இணங்கப்பட்ட விலையுடன் ICTA வெளித் தரப்பினருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

மேலதிக தகவல்களுக்காக வருமான அனுமதிப் பத்திரத்திற்குரிய குறித்த உடன்படிக்கை இலத்திரனியல் காணி மற்றும் நீதிமன்ற சுயசெயற்பாடுகள் தொடர்பான உடன்படிக்கையில் தயவுடன் பயன்படுத்துமாறு அறியத்தருகின்றோம். மேலும் வீடியோ மாநாட்டில் இயலுமையை உள்ளடக்கி உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படுகின்ற செயற்பாட்டு நடைமுறைச் செலவினங்கள் அதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2022 இன் போது டிஜிட்டல் சௌபாக்கியத்திற்காக சேர்க்கப்பட்ட சகல பதவியணியினரும் செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்ட மாதிரி விரிவுபடுத்தல் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அதன் போது அவர்களின் சம்பளம் உரிய செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளது.

தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மைக்கு (ICTA) மூன்றாவது தரப்பினருக்கு செலுத்தப்படுகின்ற ஆலோசனைக் கட்டணம் மற்றும் வெளி செயற் திட்டங்களுக்காக அவர்களிடமிருந்தான கூறுவிலையின் கீழ் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டு செலவினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. சாராம்சமாக செயற்திட்டத்தின் செயற் பாட்டு செலவினங்கள் மற்றும் செயற்திட்டங்களில் ஈடுபட்டிருக்கின்ற ஆலோசனையாளர்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் என்ற இரண்டினையும் உள்ளடக்கி இணங்கப்பட்ட விலையுடன் ICTA வெளித் தரப்பினருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

மேலதிக தகவல்களுக்காக

| | | |
|---|---|---|
| | வருமான அனுமதிப்பத்திரத்திற்குரிய குறித்த உடன்படிக்கை காணொளி மாநாட்டின் இயலுமையை உள்ளடக்கிய ஈ-காணி மற்றும் நீதிமன்ற சுயசெயற்பாடுகள் தொடர்பான உடன்படிக்கை, உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுகின்ற செயற்பாட்டு மீண்டெழும் செலவினங்களுக்காக ஈடுபடுத்த முடியும். | |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டுக் கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் (60) ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி 425 நாட்களின் பின்னர் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்தது. | வருடாந்த அறிக்கை தயாரிக்கும் தாமதத்தின் காரணமாக கணக்காய்விற்காக கணக்குகளை தயாரிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு தற்போதும் மேற்கொள்ளப்படுகின்றது. 2023 நவம்பர் மாத இறுதிக்கு முன்னர் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அதற்கு இணங்க ஆண்டறிக்கை 2024 சனவரி இறுதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. இந்த பின்னடைவுகளை நீக்கி எங்களால் கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை இரண்டும் பூர்த்தி செய்வதற்காக குறித்துரைத்த காலப் பகுதிக்கு இணங்க செயற்படுத்தப்படுமென உறுதிப்படுத்துகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |